**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO.129/ 2024**

Deposition of RW - 2 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 04.03.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணிராம்** | Age | : |
| Father's Name | : **சுப்பிரமணி** | Village | : |
| Calling | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட நிர்வாகியாக பணிபுரிகின்றேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | | காப்பீடு | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.3 | | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| எ.ம.சா.ஆ.4 | | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| எ.ம.சா.ஆ.5 | | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| எ.ம.சா.ஆ.6 | | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேன். மனுதாரர் எங்கள் நிறுவனத்தைப் பொருத்தவரை 3-ம் தரப்பினர். விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். காப்பீடு விதிகள் மீறப்பட்டிருந்தால் எங்கள் நிறுவனம் மனுதாருக்கு இழப்பீட்டை கொடுத்துவிட்டு 1-ம் எதிர்மனுதாரரிடம் வசூல் செய்து கொள்ளவேண்டும்

என்றால் சரியல்ல. விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று தேதிகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது மருத்துவமனையில் ஏற்பட்ட தவறு என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனம் 20.01.2025– வரை பர்மிட் உள்ளது. ஆனால் அந்த பர்மிட் 03.08.2023–ம் தேதி சரண்டர் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |